**கவனிக்க.-** *2020.01.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2160 - 2020 ජනවාරි මස 24 වැනි සිකුරාදා - 2020.01.24**

*2160 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 140 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 138 | ஏல விற்பனைகள் | 143 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | |


**கவனிக்க.-** (i) பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, பெப்புருவரி மாதம்14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் -திருகோணமலை**
**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க**
**ஏல விற்பனை- 2020.01.29.**

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் , உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2020.01.29 ஆந் திகதி அன்று பி.ப. 3.00 மணிக்கு கிண்ணியா பொலிஸ் நிலைய வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ்வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் (ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்).
2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.
3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப்பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.
4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான்/மேலதிக மாவட்ட நீதிபதி.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை.

**பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள வழக்குச் சான்றுப் பொருட்களின் விபரங்கள்**
**நீதிவான் நீதிமன்றம்- திருகோணமலை - 2020.01.29**
**ஏல விற்பனை நடைபெறும் இடம்: கிண்ணியா பொலிஸ் நிலைய வளாகம்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| | | **மணல்** | |
| 01. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | ஆற்று மணல் | 130 கியுப் |
| | | **கிரவல்** | |
| 02. | MC3349/19 | கிரவல் | 3 கியுப் |
| 03. | MC4012/19 | கிரவல் | 3 கியுப் |
| | | **சிப்பித் தூள்கள்** | |
| 04. | MC1302/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 50 |
| 05. | MC2126/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 19 |
| 06. | MC3288/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 190 |
| 07. | MC2320/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 270 |
| 08. | MC4010/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 25 |
| 09. | MC4095/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 165 |
| 10. | MC4847/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 75 |
| 11. | MC4848/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 250 |
| 12. | MC4978/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 100 |
| 13. | MC5547/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 300 |
| 14. | MC6014/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 03 |
| 15. | MC5036/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 227 |
| 16. | MC5035/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 228 |
| 17. | BR 2701/14 | தோணி | 01 |
| 18. | BR 1099/18 | பழுதடைந்த படகு | 01 |
| 19. | MC 731/15 | பழுதடைந்த படகு | 01 |
| 20. | AR 327/19 | பழுதடைந்த படகுகள் | 08 |

1- 781/1

## நீதிவான் நீதிமன்றம் -திருகோணமலை வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2020.01.30.

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் , உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2020.01.30 ஆந் திகதி அன்று பி.ப. 3.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ்வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் (ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்).

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப்பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான்/மேலதிக மாவட்ட நீதிபதி.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை.

### பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள வழக்குச் சான்றுப் பொருட்களின் விபரங்கள் நீதிவான் நீதிமன்றம்- திருகோணமலை - 2020.01.30

**மணல்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| 01. | MC21/20, MC24/20, MC22/20, MC5816/19, MC5439/19, MC5026/19, MC 4926/19. MC 4798/19, MC 4750/19, MC 4749/19, MC 4554/19, MC 4555/19, MC 5514/19 | ஆற்று மணல் | 13 கியுப் |
| 02. | வழக்கிழக்கம் தெளிவில்லாத | ஆற்றுமணல் ( சீனக் குடா பொலிஸ்நிலைய வளாகம்) | 4 கியுப் |
| 03. | MC5402/19 | கடல் மணல் அடங்கிய பசளை உறை 08, சவள்01 | 09 |
| | | **கிரவல்** | |
| 04. | MC5438/19, MC5359/19, MC5221/19, MC5223/19, MC5222/19, MC4623/19, MC4622/19, MC3378/19. | கிரவல் | 24 கியுப் |
| | | **சிப்பித்தூள்கள்** | |
| 05. | BR1193/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 300 |
| 06. | BR1195/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 600 |
| | | **வாகனங்கள்** | |
| 07. | MC4245/15 | டாடா ( Tata bata) பட்டா வர்க்க லொறி பதிவிலக்கம் : EPLG 4864 | 01 |
| | | **ஏனையவைகள்** | |
| 08. | MC1343/17 | கருப்பு நிற சம்சுங் M 290 KS கையடக்கத் தொலைபேசி | 01 |
| 09. | AR 57/15 | சம்சுங் DOUS வர்க்க கருப்பு நிற கையடக்கத் தொலைபேசி | 01 |
| 10. | AR 1023/18 | சம்சுங் வர்க்கCE 0168 வெள்ளை நிற கையடக்கத் தொலைபேசி | 01 |
| 11. | AR 1052/19 | லுமாலா வர்க்க 69941154 துவிச்சக்கர வண்டி | 01 |
| 12. | MC4565/07 | ஒமேகா (Omega) வர்க்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 13. | AR 1244/19 | இரும்புத் துண்டங்கள் | 11 |
| 14. | AR 1053/19 | S.F. 400 வெள்ளை நிற பிளாஸ்டிக் தராசு 01, பித்தளை பொருட்கள் 184, | |

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| | | பச்சை மற்றும் மஞ்சல் நிறங்கலந்த துணி பை01, நிக்கல் கலர் கோப்பை 01. | 187 |
| 15. | MC6114/19, MC6115/19, MC6010/19, MC6008/19, MC6013/19, MC4604/19, MC4394/18, MC4554/19, MC4555/19, MC4135/19, (வழக்கிலக்கம் தெளிவில்லாத- 02.) | சவள்கள் | 12 |
| 16. | MC4798/19 | பெரிய இரும்பு வாளி 02, மண்வெட்டி 01, சவள் 03 | 06 |
| 17. | MC 23/20 | மண்வெட்டி 01, சவள் 01 | 02 |
| 18. | MC 21/20 | மண்வெட்டி 01, சவள் 01 | 02 |
| 19. | MC6034/19 | சவள் 03, மண்வெட்டி | 04 |
| 20. | MC 5251/18 MC 5250/18 | பெரிய சுத்தியல்கள் | 02 |
| 21. | MC 4701/17 | பொப்லர் | 01 |
| 22. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | கோடரிகள் | 11 |
| 23. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | மரம் அறுக்கும் கை வாள்கள் | 09 |
| 24. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | TCL 30 m வயர் | 01 |
| 25. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | Tools set (பழுது பார்க்கும் உபகரணங்கள் பொதி) | 01 |
| 26. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | பரல்கள் | 10 |
| 27. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | செப்புக் குழாய் சுருள்கள் | 10 |

1- 781/2

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் கீழ், நேன் லங்கா ப்ரமோன்ஸ் லிமிட்டெட் கம்பனியின் பதிவு இல. PB 4999 அதன் பதிவு செய்யப்பட்ட கம்பனி , இல. 14, ரீட் அவென்யு, கொழும்பு 7. 2019, திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரிவு 11(2) இன் படி அதன் பெயரை நேன் லங்கா ப்ரமோன்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் என மாற்றப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்ரேட் அட்வைசரி
சேர்விசஸ்
(பிரைவெட்) லிமிட்டெட்,

கம்பனிச் செயலாளர்கள்.

1- 571

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2019, திசெம்பர் 30 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : வேல குரூப் சிலோன் (பிறைவட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்* : பீவீ 00218907

*பதிவு முகவரி* : 15, வெள்ளவத்தை, ஹிக்கடுவ 80240

மரியற்றா சிரிவர்தன,
கம்பனிச் செயலாளர்.

1- 572

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர்* : அகம்போடி மென்டிஸ் குரூப் (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்* : பீவீ 00217870
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2019.11.25
*பதிவு முகவரி* : தொரலஹேனை டீ பெக்டரி, தல்கஸ்யாய, அக்மீமன

தபால் குறியீடு : 80000

கம்பனிச் செயலாளர்கள்.

1- 582

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர்* : எஸ். எம். ஜே.சி. லங்கா (பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்*: பீவீ 00218090
*பதிவு செய்யப்பட்ட முகவரி* : இல.533/2, குருந்துவத்தை , 2 ஆம்ஒழுங்கை, எவரிவத்த வீதி, வத்தளை.

பணிப்பாளர்.

1- 614

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 05, டொரின்டன் லேன் , டொரின்டன் வீட்டுக் கட்டடத் தொகுதியில் இலக்கம் E 39, எனும் முகவரியில் வசிக்கும் சுரேஷ் கணிஷ்த மாலியத்த (தேசிய அ.அ.இல.720580799V) ஆகிய நான், கொழும்பு 05, டொரிங்டன் லேன், டொரின்டன் வீட்டுக் கட்டடத் தொகுதியில் இல. E39, எனும் முகவரியில் வசிக்கும் வினோலா மாலியத்த திருமணத்திற்கு முன் மிகேல் (தேசிய அ.அ.இல.728234032Vஎன்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பிரிமாலி மஹேஷிகா த சொய்ஸா குணசேகர என்பவரால் 2011, யூலை மாதம் 07 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட 1766 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவத்தை 2020, சனவரி மாதம் 07 ஆந் திகதி முதல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்படி அற்றோணித்தத்துவத்தின் மீது அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து எனது சார்பாக அவர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்புதாரியாக இருக்கப்போவதில்லையெனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் அனைத்து பொது மக்களுக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுரேஷ் கணிஷ்த மாலியத்த.

2020.01.07.

1- 575

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

யாழ்ப்பாணம், கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த கனகசபை பாலசந்திரன் ஆகிய நான், 11471 என்ற இலக்கத்தையுடையதும் 2017.04.01ஆந் திகதியிடப்பட்டதும் மானிப்பாய், பிரசித்த நொத்தாரிசு ஆர் . வசந்தசேனன் என்ப வரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இலங்கைக் குடியரசின் யாழ்ப்பாணம், நல்லூர் குறுக்கு வீதி 8 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சிவலிங்கம் உருத்திரலிங்கம் என்பவரின் பெயரில் வழங்கப்பட்டதுமான அற்றோணித்தத்துவத்தை 2020, சனவரி 6 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் இல்லா தொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன் என மேற்குறிப்பிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

1- 583

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 19/1, B.K.R.நகர், சாதி வீதி, காந்திபுரம், கோயம் புத்தூர் 12, தமிழ்நாடு, தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் G. சகுந்தலா என்கிற கண்ணாத்தாள் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K. கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 189 மற்றும் 2010.04.06 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் இல. 339, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 04 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P., என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக் கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும், இத்தால் தெரிவிக் கின்றேன்.

G. சகுந்தலா என்கிற கண்ணாத்தாள்.

1- 588/1

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 8/1, வள்ளலார் வீதி, நாட்டரசன் கோட்டை, சிவகங்கை மாவட்டம், தமிழ் நாடு , தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் K.N. ராமநாதன் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K.கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 184 மற்றும் 2010.03.15 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் இல.339,காலிவீதி,பம்பலப்பிட்டி, கொழும்பு 4 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P. என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணிதத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

K.N. ராமநாதன்.

1- 588/2

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பழைய இல. 2, புதிய இல. 2, சோலையப்பா முதலி வீதி, மயிலாபூர் , சென்னை , தமிழ் நாடு, தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் சாரதா சொக்கலிங்கம் என்கிற வள்ளியம்மை ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K. கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 190 மற்றும் 2010.04.06 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தினால் இல. 339, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 4 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P. என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணிதத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சாரதா சொக்கலிங்கம்
என்கிற வள்ளியம்மை.

1- 588/3

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 8/1, வள்ளலார் வீதி, நாட்டரசன் கோட்டை, சிவகங்கை மாவட்டம், தமிழ் நாடு , தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் L.வள்ளியம்மை ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K. கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 182 மற்றும் 2010.03.15 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தினால் இல. 339, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 4 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P. என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணிதத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

L.வள்ளியம்மை.

1- 588/4

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 68/1, முத்துப் பட்டினம் 2 ஆம் வீதி, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு, தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் K.N. விசாலாக்ஷி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K. கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 181 மற்றும் 2010.03.15ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் இல. 339, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 04 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P., என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும், இத்தால் தெரிவிக்கின்றேன்.

K.N. விசாலாக்ஷி.

1- 588/5

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிரதான வீதி, ஒக்கர் , சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு, தென் இந்தியா எனும் முகவரியில் வசிக்கும் VR.C. மீனாட்சி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு K. கலையப்பன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 183 மற்றும் 18/ 2008 மற்றும் 2010.03.15ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் இல. 339, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 04 இல் வசிக்கும் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் J.P., என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும், இத்தால் தெரிவிக்கின்றேன்.

VR.C. மீனாட்சி .

1- 588/6

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

தலவத்துகொட, அநாகரிக தர்மபால பிளேஸ், இல. 506 என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 637601563V கொண்ட கம்பொலகே மாயா மேகலதா பொன்சேகா ஆகிய நான், 2010, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி கொழும்பில் திருமதி டீ.ஏ.டீ. திசாநாயக்க பிரசித்த நொத்தாரிசினால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 5465 என்ற அற்றோணி தத்துவப் பத்திரம் மூலம் கொஹுவல, கிறீன் பாத், இல. 196C என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 562580662V கொண்ட கம்பொலகே அருனாலோக்க பொன்சேகா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவ அதிகாரத்தை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி தொடக்கம் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

கம்பொலகே மாயா மேகலதா
பொன்சேகா.

1- 618

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாரவில, குருந்துவத்தை, "தீப சேவா" எனும் முகவரியில் வசிக்கும் வர்ணகுல வீரசூரிய சில்வினா மல்காந்தி பெர்னான்டோ (தே.அ.அ.இல. 676723870V) ஆகிய நான், வென்னப்புவை சட்டத்தரணி டபிள்யூ. எஸ். என். திசேரா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1953 மற்றும் 2014.12.10 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் அதே முகவரியில் வசிக்கும் வர்ணகுல வீரசூரிய அலெக்சிஸ் பெனடிக் த லொஸ்தா பெர்னான்டோ அல்லது வர்ணகுல வீரசூரிய அலெக்சிஸ் பெனடிக் ( தே.அ.அ.இல. 441993900V) என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித் ததை இதன் மூலம் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

வர்ணகுல வீரசூரிய சில்வினா
மல்காந்தி
பெர்னான்டோ.

1-737

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான வி-ற்பனை அறிவித்தல்*

ஃபெயர்வே மினேர்வா ( பிறைவெட்) லிமிட்டெட்.
கணக்கு இலக்கங்கள் : 0122 1000 4600

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.20ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.12.12ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நூற்று நான்கு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 104,47,21,977.63) 2019, நவெம்பர் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நூறு கோடி ரூபா (ரூபா 100,00,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) கட்டணத்துடன் வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1306 இன் மீது பெற்றுக் கொண்ட கூறப்பட்ட கடன் தொகைக்காக பிணையாக கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள் நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2020.02.10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல. C31 கிராம அலுவலர் பிரிவின் கேஹேல் வத்த வோட் இல. 18, அலுத்கடே இல் அமைந்த ஒல்கொட் மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 341, 341/1ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. சீ. குலவன்ச

என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 47 –2013 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலீஸ் விடுதிகள்) மற்றும் ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மீஹீந்து வித்தியாலயம்) ; கிழக்கு : ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மீஹீந்து வித்தியாலயம்) எம். டீ. குணசேன மாவத்தை ; தெற்கு: வீதி மற்றும் ஒல்கொட் மாவத்தை மற்றும் மேற்கு: ஒல்கொட் மாவத்தை மற்றும் ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலிஸ் விடுதிகள்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் மற்றும் ஐந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 3றூ. 5.25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 47 - 2013 எனும் வரை படத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X கீழே விபரிக்கப்பட்ட காணியின் உப பிரிவாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல் C31 கிராம அலுவலர் பிரிவின் சென் செபஸ்த்தியன் வோட் இல் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 341 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். பொத்தேஜு என்பவரால் தயாரிக்கப்பட்ட 1946, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 3 எனும் வரைபடத்தில் அனைத் தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வரிமதிப்பீட்டு இல. 331 (நொரிஸ் வீதி) பொலீஸ் விடுதிகள் ட்றினிட்டி இடம், வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 ட்றினிட்டி தேவாலய வளவு; கிழக்கு: லொட் C2 ; தெற்கு: லொட் D வரிமதிப்பீட்டு இல. 343 (நொரிஸ் வீதி) ; மற்றும் மேற்கு: (நொரிஸ் வீதி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மற்றும் இருபது பேர்ச் (1ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 181/122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-518

## பப்லிக் பாங்க் பர்ஹாட் மூலம் பகிரங்க ஏல விற்பனை

*1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி வியாபாரக் கருத்தைக் கொண்ட அதிகாரம் பெற்ற வர்த்தக வங்கியான மற்றும் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆவது பிரிவு மற்றும் அதன் திருத்தப்பட்ட ( சொல்லப்பட்ட 1990ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தின்படி) மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்*

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவில், முன்னர் தல்பே கிராம அலுவலர் பிரிவில் விபரப்படுத்தப்பட்ட இல.133சீ, நாகஹவத்த கிராம அலுவலர் பிரிவினுள் , ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில் விபரிக்கப்பட்ட அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் முன்னர் ஹபராதுவ பிரதேச சபை என விபரிக்கப்பட்ட அக்மீமன பிரதேச சபை எல்லையினுள் உட்பட்ட முன்னர் தல்பே என அடையாளப்படுத்தப்பட்ட மஹரம்ப கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளர் என்டன் சமரரத்ன அவர்களால் 2014, யூன் மாதம் 15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 3876A என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் A ( அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் என்டன் சமரரத்ன அவர்களால் 2012, பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3786 என வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட "லிந்துமுலவத்த" என பிரித்து எல்லையாக நியமிக்கப்படட் லொட் A மற்றும் "தெல்கஹவத்த" என பிரித்து எல்லையாக நியமிக்கப்பட்ட லொட் 01 என அருகிலுள்ள மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட இரண்டினையும் ஒன்று சேர்க்கப்பட்டு மீண்டும் அளந்த படி), இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.17.68பே. அல்லது 0.0447 ஹெக்டயார். விசாலமான காணித்துண்டு மற்றும் அதன் மீதுள்ள மண், கட்டிடம், பயிர்செய்கை,அதற்குட்பட்ட சகலதும்.

"குலுவ ஹேவகே சிசிர குமார என்பவரினால் பப்ளிக் பாங்க் பர்காடிற்கு அடகு வைக்கப்பட்ட மேலே ஆதன இடாப்பில் குறிப்பிடப்பட்ட காணி.

2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு மேற்சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**– 2019.11.15ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் "திவயின", "த ஐலன்ட் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்கு பிரவேசிக்கும் வழி** .– காலி- மாத்தறை வீதியினூடாக தலவெல்ல சந்தியில் பயணிக்கும் பொழுது அங்கிருந்து இடது பக்கம் உள்ள மெதரம்ப வீதியூடாக இன்னும் 1/4 கிலோ மீற்றர் பயணிக்கும் பொழுது குறிப்பிடட் காணி அந்த வீதியின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 10 %;
2. உள்ளூராட்சி மன்ற வரி 1% (நூற்றுக்கு ஒன்று);
3. ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
4. நொத்தாரிசுக் கட்டணம்;
5. இலிகிதர் கட்டணம் ரூ.1500.00;
6.ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

மிகுமி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் இல.340, ஆர்.ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள பப்ளிக் பாங்க் பர்ஹாட் கிளையில் செலுத்த வேண்டும்.

**வேறு விபரங்களுக்கு:** கடன் பிரதானி, பப்ளிக் வங்கி பர்ஹாட், இல. 340, ஆர்.ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு -03.
தொலைபேசி இல.: 077- 7679589.

எல். பி. சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர் மற்றும்
கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்,
அரச மற்றும் வர்த்தக வங்கி
ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி/தொலைநகல் இல.: 011-2445393.

1- 619